**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்
**29 ஜூலை 2022 / 29 துல்ஹஜ் ஹிஜிரி 1443**

# ஹிஜ்ரத் - நமது பெற்றோர்களின் தியாகங்களை உணர்வது

**الحَمْدُ لِلَّهِ الَّذِي جَعَلَ فِي اخْتِلَافِ اللَّيْلِ وَالنَّهَارِ آيَاتٍ لِأُولِي الْأَلْبَابِ، وَجَعَلَ الْمُحَرَّمَ مِنَ الأَشْهُرِ الْحُرُمِ تَذْكِيرًا لِحُرْمَتِهِ لِمَنْ تَابَ إِلَيْهِ وَأَنَابَ، وَأَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ الْكَرِيْمُ الْوَهَّابُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ الَّذِي اصْطَفَاهُ وَأَنزَلَ عَلَيْهِ الْكِتَابَ، اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا محمدٍ وَعَلَى آلِهِ وَصَحْبِهِ صَلاةً نَنَالُ بِهَا شَفَاعَتَهُ يَوْمَ الْحَشْرِ وَالْحِسَابِ. أَمَّا بَعْدُ، فَيَا عَبَادَ اللهِ، اِتَّقُوا اللهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ**

**அல்லாஹ்வின் அருள்மிக்க சகோதர, சகோதரிகளே!**

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நமக்கு ஏற்படுத்தியுள்ள அனைத்து கடமைகளை நிறைவேற்றுதன் மூலமாகவும் அல்லாஹ் தடை செய்துள்ள விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதன் மூலமாகவும் அல்லாஹ்வின் மீதான நமது "தக்வா" [பக்தியை] நாம் அனைவரும் இணைந்து பலப்படுத்திக் கொள்வோமாக! அல்லாஹ்வை தொடர்ந்து நினைவில் கொள்ளும் அடியார்களில் ஒருவராக நாம் ஆகுவோமாக!

**சகோதர, சகோதரிகளே!**

புதிய ஹிஜிரி ஆண்டின் வருகையைச் சுட்டிக் காட்டுகின்ற முஹர்ரம் மாதம் நெருங்கி வருகிறது. புதிய ஹிஜிரி ஆண்டைப் பற்றி பேசப்படும் போது, ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு உடல் ரீதியாகச் செய்யப்பட்ட "இடம் பெயர்தலை" மட்டும் கவனத்தில் கொள்ளாமல் நமது இறைத்தூதர்[ஸல்] அவர்கள் செய்த முழுமையான "ஹிஜ்ரத்" எனும் தியாகப் பயணத்தை நினைவில் கொள்வதும், அதில் பாடம் பெறுவதும் அவசியமாகும்.

இறைத்தூதர்[ஸல்] அவர்களின் "ஹிஜ்ரத்" எனும் தியாகப் பயணமாகிறது, நமது தற்போதைய நிலையை விடச் சிறந்ததாக நமது நிலையை மாற்றிக் கொள்ள வேண்டும் எனப் போதிக்கிறது. மேலும், அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்ற வேண்டும் எனவும் அல்லாஹ் தடை செய்துள்ள விஷயங்களைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் நமக்குக் போதிக்கிறது. இறைத்தூதர்[ஸல்] அவர்கள் நவின்றுள்ளார்கள்:

وَالْمُهَاجِرُ مَنْ هَجَرَ مَا نَهَى اللَّهُ عَنْه

பொருள்: எவற்றை அல்லாஹ் தடை செய்துள்ளானோ அவற்றிலிருந்து தவிர்ந்து கொள்பவரே உண்மையான "முஹாஜிர்" [அதாவது] தியாகப் பயணம் செய்தவர்] ஆவார். [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்கள்: இமாம் புகாரி ரஹ், இமாம் முஸ்லிம் ரஹ்]

புதிய ஆண்டின் வருகையை முன்னிட்டு, ஒரு ”முஃமின்” [ஓரிறை நம்பிக்கையாளர்] நன்மைகளையும் நற்காரியங்களையும் செய்வதில் நிலைத்து நிற்பார்; அல்லாஹ் தடை செய்துள்ள விஷயங்களை விட்டு விடவும் முயற்சி செய்வார். இன்றைய ”குத்பா” பிரசங்கத்தில் ஒரு முக்கியமான விஷயத்தை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். அதன் மூலம் ”ஹிஜ்ரத்” தின் உண்மையானப் பொருளை அறிந்து, அதனை நமக்குள் நாம் செயல்படுத்தலாம்; அதன் மூலம் நாம் முன்னேற்றத்தையும் அடையலாம்.

நான் நினைவூட்ட விரும்பும் அந்த முக்கியமான விஷயம், நமது குடும்பத்தார்களுடனான நமது உறவுகளைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும் என்பதாகும். நமது குடும்ப உறுப்பினர்களுக்கும் நமக்கும் மத்தியிலான உறவை முன்னேற்றிக் கொள்வது எவ்வாறு? அதற்கு என்ன வழி உள்ளது? எனச் சிந்திக்க வேண்டும்.

**சகோதர, சகோதரிகளே**!

நமது பெற்றோர்களுக்கான உரிமைகளை நாம் வழங்க வேண்டும்; அவர்களுக்கானக் கடமைகளை நிறைவேற்ற வேண்டுமென நாம் நமது மார்க்கத்தால் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளோம். பெற்றோர் மற்றும் பிள்ளைகளுக்கிடையே சண்டை, சச்சரவுகள் நடைபெற்ற போதிலும் பெற்றோர்களுக்கு மரியாதை செய்ய வேண்டுமெனவும், அவர்கள் விஷயத்தில் அக்கறை செலுத்த வேண்டுமெனவும் இஸ்லாம் நமக்குப் போதித்துள்ளது. அதாவது, பிள்ளைகள் தமது பெற்றோர்களின் உரிமைகளுக்கு முடிந்த அளவு சிறப்பாக மரியாதை செய்ய முயற்சிப்பது

அவசியம் என்பது இதன் மூலம் புரிய வருகிறது. அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்:

وَإِن جَٰهَدَاكَ عَلَىٰٓ أَن تُشْرِكَ بِى مَا لَيْسَ لَكَ بِهِۦ عِلْمٌ فَلَا تُطِعْهُمَا ۖ وَصَاحِبْهُمَا فِى ٱلدُّنْيَا مَعْرُوفًا ۖ
وَٱتَّبِعْ سَبِيلَ مَنْ أَنَابَ إِلَىَّ ۚ ثُمَّ إِلَىَّ مَرْجِعُكُمْ فَأُنَبِّئُكُم بِمَا كُنتُمْ تَعْمَلُونَ ١٥

பொருள்: ஆனால், நீ எது பற்றி அறிவு [ஆதாரம்] பெற்றவனாக இல்லையோ அதனை எனக்கு இணை வைக்குமாறு உன்னை அவ்விருவரும் [பெற்றோர்கள்] வற்புறுத்தினால் அப்போது நீ அவ்விருவருக்கும் கட்டுப்பட வேண்டாம்; ஆனால் இவ்வுலக வாழ்க்கையில் அவ்விருவருடனும் அழகிய முறையில் உறவு வைத்துக் கொள்; [யாவற்றிலும்] என்னையே நோக்கி நிற்போரின் வழியையே நீ பின்பற்றுவாயாக! பின்னர் உங்கள் [அனைவருடைய] மீளுதலும் என்னிடமேயாகும். நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள் என்பதை [அப்போது] நான் உங்களுக்கு அறிவிப்பேன். [அத்தியாயம்: லுக்மான், வசனம்: 15]

**சகோதர, சகோதரிகளே!**

ஒருவர் மார்க்க சம்பந்தமான நற்காரியங்களைத் தொடர்ந்து செய்து வந்த போதிலும் பெற்றோர்களுக்கானக் கடமைகளையும் பொறுப்புகளையும் அவர் நிறைவேற்றவில்லையெனில் அவர் அல்லாஹ்வின் கிருபையையும் அவனது அருள்களையும் பெறமாட்டார்.

பெற்றோர்கள் கஷ்டப்படுவதற்கு பிள்ளைகள் காரணமாக இருப்பார்களானால் அதை விட துரதிருஷ்டமான விஷயம் வேறு எதுவாக இருக்க முடியும்? பெற்றோர்களுக்கு மாத உதவித் தொகைகள் கொடுக்கப்படுவதில்லை; அவர்களை அரிதாகவே நேரடியாகச் சந்திக்கப்படுகிறது; தமது பிள்ளைகள் மற்றும் வாழ்க்கைத் துணைகளுக்கும் பெற்றோர்களுக்கும் மத்தியிலான உறவு சரியில்லை; பெற்றோர்களின் காரணமாக தொல்லைகள் ஏற்படுகின்றன என்பதைக் காரணம் காட்டி, வாடகைக் குடியிறுப்புகளில் தங்கும் படி சில பெற்றோர்கள் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்; இவையெல்லாம் மிகவும் வருந்தத்தக்க விஷயங்களாகும்.

சுப்ஹானல்லாஹ்! [அல்லாஹ் பரிசுத்தமானவன்; மேலானவன்] பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் மத்தியிலான உறவுகள் இவ்வாறு இருக்கும் நிலையில், மேலும், பிள்ளைகள் விஷயத்தில் பெற்றோர்கள் அதிருப்தியாக இருக்கும் நிலையில், அப்பிள்ளைகள் அல்லாஹ்வின் நீதிமன்றத்துக்கு முன்பாக எவ்வாறு பதற்றமின்றி நிற்க முடியும்?

ஒருமுறை, நமது இறைத்தூதர்[ஸல்] அவர்கள்:
"அவர் பரிதாபகரமானவராகவும் துரதிருஷ்டமானவராகவும் ஆகி விட்டார்" என மூன்று முறை கூறினார்கள். அப்போது தோழர்கள் : இறைத்தூதர் அவர்களே! தாங்கள் யாரைப் பற்றி இவ்வாறு கூறுகிறீர்கள் எனக் கேட்ட போது, "எவர் தனது வயது முதிர்ந்த பெற்றோர்களுடன் வாழும் வாய்ப்பைப் பெற்றும் கூட, [அவர்களுக்குப் பணிவிடை செய்து, அவர்களுக்கானக் கடமைகளை நிறைவேற்றி] சொர்க்கம் செல்லவில்லையோ அவரைப் பற்றித் தான் கூறுகிறேன்" என

இறைத்தூதர்[ஸல்] அவர்கள் கூறினார்கள். [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் முஸ்லிம் ரஹ்]

நமது பெற்றோர்களுக்குச் சேவை செய்வதன் மூலம் அல்லாஹ்வின் அருள்களைப் பெறுவோமாக! நாம் அனைவரும் சொர்க்கத்தில் இணைந்து இருப்போமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَ أَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَ لَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم**

**இரண்டாவது பிரசங்கம்**

**الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللهِ، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.**

**أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّيَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَ بَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.**

**وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.**

**اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا**

**ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَارَبَّ العَالَمِينَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنيَا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.**

**عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي القُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُركُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضلِهِ يُعطِكُم، وَلَذِكرُ اللهِ أَكبَرُ، وَاللهُ يَعلَمُ مَا تَصنَعُونَ.**